**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். MC 3 /2022**
**வழக்கு சாட்சி. எ.ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ரமேஷ்குமார் | | | |
| **தந்தை பெயர்** | : | பசுபதி | **தொழில்** | : | |
| **கிராமம்** | : | அறந்தாங்கி | | | |
| **தாலுகா** | : | அறந்தாங்கி | **வயது** | : | 41 /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

01.12.2025

**எதிர்மனுதாரர் மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை:**

எனது நிருபண வாக்குமூலத்தினை ஏற்கனவே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் அப்போது ஆவணங்கள் என்னால் குறியீடு செய்யப்படவில்லை. தற்சமயம் Crl.M.P.3799/2025, Crl.M.P.3800/2025 மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் அறந்தாங்கி H.M.O.P.19/2020 வழக்கில் மனுதாரர் சரோஜினி அளித்த வாக்குமூலம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்படுகிறது. (மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்தில் எதிர்மனுதாரர் மேற்படி ஆவணத்தை சட்டப்படி குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபணை செய்யப்பட்டது.) மேற்படி ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும் என்று மேற்படி ஆவணம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. எதிர்மனுதாரர் வேலை செய்யும் கடையின் லைசன்ஸ் பதிவிறக்க நகல் தாக்கல் செய்யப்படுகிறது. (மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணத்தில் எதிர்மனுதாரர் வேலை செய்வதற்கான எவ்வித விவரமும் இல்லை என்றும், அதனால் இவ்வழக்கிற்கும் இந்த ஆவணத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என ஆட்சேபணை செய்யப்பட்டது.) மேற்படி ஆட்சேபணை குறித்து வழக்கின் இறுதியில் தீர்மானிக்கப்படும் என்று மேற்படி ஆவணம் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. எதிர்மனுதாரரின் தாயார் சிகிச்சை பெற்றதற்காக ஆன செலவினங்களுக்கான பில்கள் அசல் **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.